1972 ஆகஸ்ட் 19]

Kite flying

***179 Q. Dr. H. V. HANDE**: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that a number of children have died for the craze of kites in the City of Madras in the months of September and October 1971; and

(*b*) if so, the details thereof and the precaution taken by the City Police?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) 1971 அக்டோபரில் காற்றாடி பிடிக்கும் ஆர்வத்தில் நான்கு சிறுவர்கள் உயிரிழந்தனர். காற்றாடி பறக்கவிடும் காலம் தொடங்குவதற்கு முன்னரேகூட காவலர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்தனர். காற்றாடி பறக்கவிடுவதை மும்முரமாகத் தடைசெய்யுமாறு காவல் நிலையங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பலர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. காற்றாடி பறக்கவிடுகின்றவர்களை வளைத்துப்பிடிக்கும் உத்தரவுடன், காவலர்கள் காலையிலும் மாலையிலும் வழக்கமாகப் பாராக் காவற் பணியும் ரோந்துக் காவற்பணியும் செய்தனர். காவலர்கள் மேற்கொண்ட இந்த முன்னெச்சரிக்கைகளின் விளைவாக மேற்சொன்ன நான்கு சிறுவர்கள் இறந்ததைத் தவிர, வேறு நிகழ்ச்சிகள் ஏதுவும் இல்லை.

திரு. ஆ. பரந்தாமன் : துணைத் தலைவர் அவர்களே, பந்தயங்கள் வைக்காமல் காற்றாடி விடலாம் என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சென்னை மாநகர காவல் துறைச் சட்டப்படி 71-ஆவது பிரிவு 16-ஆவது பகுதியின் கீழ் காற்றாடி பறக்க விடுவதே குற்றம் என்று கொள்ளப்படும்.

திரு. கே. டி கே. தங்கமணி : ஜனநெருக்கடி இருக்கக்கூடிய பிராட்வே போன்ற இடங்களில் தான் இம்மாதிரி காற்றாடிப் போட்டி அதிகமாக இருக்கிறது. அந்த இடங்களைத் தவிர்த்து அவர்களுக்கு வேறு மாற்று இடம் பக்கத்தில் இருக்கக்கூடிய மைதானத்தில் கொடுக்கப்பட்டு, அந்த இடத்தில் காற்றாடிகள் பறக்கவிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மைதானம், ஜன நெருக்கடி மிகுந்த இடம் என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். கூவம் ஆற்றிற்கு அருகாமையில் பரந்த வெளியில் சிறுவர்கள் காற்றாடி விட்டுக்கொண்டிருந்தபொழுது காற்றாடி அறந்துபோன காரணத்தினால் பிடிப்பதற்கு ஓடி மூன்று பேர்கள் ஆற்றில் விழுந்து இறந்துவிட்டார்கள். அதேமாதிரி தான் இன்னொரு இடத்தில் காற்றாடி விடுகிற நேரத்தில் ஒரு குழந்தை கழுத்தில் காற்றாடி கயிறு சிக்கிக்கொள்ள, கயிற்றை இழுப்பதற்கு காற்றாடி விட்ட இருவரும் முயற்சி செய்ததால், குழந்தையின் கழுத்தில் காற்றாடிக் கயிறு இறுகி, குழந்தை இறந்து விட்டது. ஆகவே ஜன நெருக்கடி உள்ள இடம், ஜன நெருக்கடி இல்லாத இடம் என்பதில்லை. காவலர்கள் காற்றாடி பறக்க விடுவதை தடை செய்யும் முயற்சியில் பொது மக்களும், மற்றவர்களும் ஒத்துழைப்பு தந்தால் நலமாக இருக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : காற்றாடி பறக்கவிடும் சிறுவர்கள் எத்தனை பேர்களை போலிஸார்கள் பிடித்தார்கள் ? அவர்கள் மீது ஏதாவது வழக்கு போடப்பட்டதா ? அதன் விவரத்தை முதல் அமைச்சர் அவர்கள் வெளியிடுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1971-ல் இப்படி 60 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

Arrest of Eve teasers

* 180 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Eve teasers in the City of Madras have been traced and arrested by the Police during their rounds in the months of August and September 1971 ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) 1971-ஆம் ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர் திங்களில், 53 பேர் குற்றவாளிகளெனத் தீர்ப்பளிக்கப்பட்டு, தண்டிக்கப்பட்டனர்.

திரு. ஆ. பரந்தாமன் : ஆண்களை ஆண்களே கேலி செய்கின்ற ராகிங் என்ற முறை கல்லூரிகளில் நிலவி வருகிறது. இதைத் தடுக்க அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.